(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE IV ADDITIONAL DISTRICT JUDGE , MADURAI.

S.C .No. 323/17

**DEPOSITION OF PW 4 WITNESS FOR PROSECUTION / DEFENCE**

Name : விக்டோரியா
Father's name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 5.12.2017

மு வி ---

நான் தற்போது ஆணையூரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் ஆணையூரில் தமிழ்நகரில் வெள்ளிகிழமை சந்தை ரோடில் பெட்டிகடை வைத்துள்ளேன். நானும் எனது கணவர் விஜயசேகரும் நடத்துகிறோம். நான் தான் கடையில் அதிக நேரம் இருப்பேன். 28.2.17 அன்று மதியம் 2 மணிக்கு ராஜேஷ் வந்து கடையில் 2 டோரினா பானம் வாங்கி சென்றார். ராஜேஷ் அம்மா பெயர் விஜயா. அவர்கள் வீடு எனது கடையிலிருந்து 4 வீடு அவர்கள் வீடு. பின்பு

லாவன்யா வந்து என் கடைக்கு வந்து 2 பிஸ்கட் பாக்கெட் வாங்கி சென்றார். நான் 2.30 மணிக்கு கடையை மூடி விட்டு வீட்டிற்கு போய் விட்டேன். நான் திரும்ப 6 மணிக்கு வரும்போது கடைக்கு முன்பும் கொலை நடந்த வீட்டிற்கும் முன்பும் கூட்டமாக இருந்தது. நான் நீதிமன்றத்திற்கு வந்து நீதிபதி முன்பு நடந்த விவரம் சொன்னேன். நான் தந்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது அதில் நான் கையெழுத்து போட்டுள்ளேன். அது அசாஆ 6.என்னை போலிசார் விசாரித்தனர். (அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது)

என்னை போலிசார் விசாரித்த போது எதிரி லாவன்யா அவர் கணவர் மணியுடன் விஜயா வீட்டிற்கு 2 சக்கர வாகனத்தில் வந்தனர் என்று நான் சொல்லவில்லை. விஜயா வீட்டிலிருந்து வெளி நபர் யாரோ 2 பேர் செல்வதை பார்த்ததாக சொல்லவில்லை. விஜயா மகன் ராஜேஷ்சும் பரபரப்பாக வீட்டை பூட்டி விட்டு வெளியில் சென்றதாக போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. லாவன்யாவுடன் வந்த மணி வெளியில் செல்வதை நான் பார்க்கவில்லை. நான் அவ்வாறு போலிசில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளை காப்பாற்ற போலிசில் சொன்னதை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால சரியல்ல.

கு வி ---- அனைத்து எதிரிகள் தரப்பில்

போலிசார் என்னை கடையில் வைத்து விசாரிததனர் . போலிசார் சொல்லி கொடுத்தன்படி நான் வாக்குமூலம் சொன்னேன் என்றால் சரியல்ல.

ம வி -- இல்லை.